மென்பதற்காகத்தான் இந்த பயிற்சிநிலையம் உருவாக்கப் பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் மெக்கானிக்ஸ் பற்றி குறிப்பிட்டார்கள் என்று கருதுகிறேன். போக்குவரத்துக் கழகங்கள் அத்தனைக்கும் சேர்த்து இன்ஜினியரிங் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் என்ற முறையில் உதிரி பாகங்களை உற்பத்தி செய்ய ஒரு நிறுவனம் ஆரம்பித்து இருக்கிறோம். அதிலே கொடுக்க வாய்ப்பு ஏற்படுமானல் அவற்றையும் பரிசீலிக்கலாம்.

டி.வி.எஸ். கம்பெனிக்கு இழப்பீட்டுத் தொகை

* 643 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை டி.வி.எஸ். போக்குவரத்தை நாட்டுடைமை ஆக்கியதில் டி.வி.எஸ்க்கு அரசு நஷ்ட ஈடாக கொடுத்தது, கொடுக்க வேண்டியது எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மதுரை சதர்ன் ரோட் வேஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தாருக்கு அரசு இழப்பீடாக ரூ. 91,55,057.25 வழங்கியுள்ளது; அரசு எடுத்துக் கொண்ட எல்லா உடமைகள் தொடர்பாகவும் இந்நிறுவனத்தார் கோரிய இழப்பீட்டுத் தொகை தொடர்பாக, முழுமையாகவும் இறுதியாகவும் கொடுத்துத் தீர்க்கும் வகையில் இத்தொகை வழங்கப் பட்டது.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, இந்த டி.வி.எஸ். நிறுவனத்திற்கு தமிழக சர்க்கார், அதை தேசிய மயமாக்கியபோது மொத்தமாகக் கொடுத்த தொகை எவ்வளவு? இன்னும் நாம் கொடுக்க வேண்டிய தொகை இருக்கிறதா? அதைக்கொடுக்கிற போது எந்த முறையில் கொடுக்கப்பட்டது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, டி.வி.எஸ். நிறுவனத்தைப் பொறுத்தவரையில் மொத்தம் கொடுக்க வேண்டிய தொகை 1 கோடியே 25 லட்சம் ரூபாய். அதில் நாம் கிராஜுவிடி அல்லது லயபிலிடி என்று பிடித்துக்கொண்டது 33 லட்சம் ரூபாய். ஆகவே, மொத்தம் தரப்படவேண்டியது ரூ. 91,55,057.25. ஏற்கனவே அது தரப்பட்டு விட்டது.

[1974 மார்ச் 27

திரு. கோவை செழியன் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். கேள்வி மீது. பேரவைத் தலைவரவர்களே, மதுரை டி.வி.எஸ். போக்கு வரத்தை நாட்டுடைமை ஆக்கியதில் டி.வி.எஸ்க்கு அரசு நஷ்ட ஈடாகக் கொடுத்தது எவ்வளவு என்று கேட்டிருக்கிருர்கள். டி.வி.எஸ். போக்குவரத்து மதுரையில் கிடையாது. சதர்ன் ரோடுவேஸ் தான் இருந்தது. இந்தக் கேள்வியை அனுமதித்ததே தவறு. கேள்வியை எப்படி டிபார்ட்மெண்டுக்கு அனுப்பி, அதற்கு பதிலும் பெற்று, இங்கே அனுமதித்து இருக்கிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன். டி.வி.எஸ். போக்குவரத்து கிடையாது. சதர்ன் ரோடுவேஸ் தான் இருக்கிறது. இந்தக் கேள்வியை எப்படி அனுமதிக்கலாம்.

திரு. கு. காமாட்சி : சதர்ன் ரோடுவேஸ் என்ருலும் ஒவ்வொரு பஸ்ஸிலும் டி.வி.எஸ். என்றுதான் எழுதியிருந்தது. தவருன தகவலை உறுப்பினர் தருகிருர்கள்.

திரு. த. சோணையா : மாண்புமிகு கோவை செழியன் அவர்கள் கேள்வி கேட்டதே தவறு என்று சொல்கிருர்கள். அந்த வார்த்தையை அவர்கள் வாபஸ் வாங்கவேண்டும். கேள்வி தவறு, கேட்டதற்கு பதில் கொடுத்தது தவறு என்று சொல்வது— என்னுடைய கேள்வி தவறு என்று சொல்வது வருத்தத்தக்க விஷயம். அதை அவர்கள் உடனடியாக வாபஸ் வாங்கவேண்டு மென்று உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்திப் : தலைவரவர்களே, 1 கோடியே 25 லட்சம் ரூபாய் அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். அது பணமாகக் கொடுக்கப் பட்டதா? அது பாண்டாகக் கொடுக்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, கேள்வியிலேயே பிரச்னை எழுந்து இருக்கிறது. டி.வி.எஸ். என்ற நிறுவனம் பஸ்களை, லாரிகளை நடத்தவில்லை. சதர்ன் ரோடுவேஸ் தான் நடத்துகிருர்கள். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்வி கேட்கிருர்கள், கேட்கிறபோது அரசாங்கத்தின் சார்பில் அந்தக் கேள்வியின் பின்னுலே இருக்கிற உணர்வுக்குத்தான் பதில் அளிக்கிருேமே தவிர அது டெக்னிகல்லாக சரியாக இல்லை என்று

சொல்லி அரசாங்கம் பொறுப்பைத் தட்டிக்கழிக்க விரும்பவில்லை. ஆகவேதான் பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் பணமாகக் கொடுக்கப்பட்டதா என்று கேட்டார்கள். அந்த நஷ்ட ஈடு பேச்சுவார்த்தை மூலமாக நிர்ணயிக்கப்பட்டது. ஆகவே அவர்களுக்கு பணமாகவே வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. என். கே. பழனிசாமி அவர்கள் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

(3) கவன ஈர்ப்பு.

(அ) கரூர் நெசவு நூற்புத் தொழிற்சாலை தொழிலாளர் வேலை நிறுத்தம் குறித்து.

Thiru N. K. PALANISAMY : Sir, I wish to call the attention of the Hon. Minister for Labour to a matter of urgent public importance, namely, tde continuous strike by the handlcom weavers in Karur weaving factories, numbering more than 3,000 pressing for more wages.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவரவர்களே, கரூர் வட்ட நெசவு நூற்புத் தொழிற்சாலை தொழிலாளர் சங்கம் கீழ்க்கண்ட கோரிக்கைகளை குறித்து 27-12-1973 அன்று ஒரு தொழிற் தகராறு எழுப்பியது :—

1. வருகைப் பதிவேடு போடுதல்.
2. எட்டு மணி நேரம் வேலை.
3. விகுதி நேரம் சலுகைகள் அளிப்பது.
4. விடுப்பு சலுகைகள் அளிப்பது.